# செம்பருத்திகள்

புதுக்கவிதைகள்

தில்லை-அமிழ்தன்

இராமுப்பிள்ளை முருகையன்;
B. Sc. (இலங்.), B. A. (லண்.), M. A. (யாழ்.)
நீர்வேலி தெற்கு, நீர்வேலி
இலங்கை

# செம்பருத்திகள்

## நல்லை-அமிழ்தன்

வெளியீடு

முன்னோடிகள்

(கலை இலக்கிய விமர்சகர் குழு)

நல்லூர் — திருகோணமலை

விலை ரூபா 2-00

வெளிவருகிறது

நல்லை அமிழ்தனின்

↓

# இன்னும் திரைப்படங்கள் இறக்குமதியாகின்றன

(சிறுகதைத் தொகுதி)

↓

# புகையிலை

(நாவல்)

# முன்னுரை

நண்பன் நல்லை அமிழ்தனின் கவிதைத் தொகுதி பற்றி எனது கருத்தை, முன்னுரை யென்ற பகுதிக்காக எழுதி அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொள்வது ஒருபுறம் இருக் கட்டும். ஈழத்தில் மரபாகிவிட்ட முன் னுரையென்ற, நூலாசிரியருக்கு முதுகு சொறியும், அல்லது தங்களது வித்துவச் செருக்கைக் காட்டும் அந்த எல்லையைக் கடந்து நின்று நல்லை அமிழ்தனைப் பற்றிக் கொஞ்சம் பேசுவோமே!

நல்லை அமிழ்தன் என்ற எழுத்தாளன் யாழ்ப்பாணக் கல்விக் கந்தோரின் எழுது வினைஞன். திருக்கோணமலை "முன்னோடிகள்" இலக்கிய சூழலின் பிதாமகன். கடந்த நான்கு வருடங்களாக திருமலை சுவாசித்த இலக்கியக் காற்றின் மூலகர்த்தா.

திருமலையில் நடந்த எழுத்தாளர், கலைஞர் மகாநாட்டு விருட்சத்தின் விழுது வேர்.

நல்லை அமிழ்தன் 1975-ம் ஆண்டு யாழ்ப் பாணத்துக்கு இடம்மாறி வந்தது. புரட்சி

கர இலக்கியத்தின் போராட்டக் காலம். ஏனெனில் அதற்கு முதல் நான்கு ஆண்டுகளும் இவர் திருகோணமலையில் கடமையாற்றி வந்தார். அப்பொழுது இவரது அறையில் தினசரி இரண்டு "இலக்கிய விருந்தாளி" களாவது தங்கி நிற்பார்கள். நாட்டின் நாலாபக்கத்திலுமிருந்து இவரைத் தேடி வந்து தங்கிப் பேசிப் போகும் நண்பர்களை நான் பல தடவைகளில் கண்டிருக்கிறேன் அவர்களில் ஒருவனாக நானும் இருந்திருக்கிறேன். அப்படியான நேரங்களில் அந்த அறை படும் பாடிருக்கிறதே அப்பப்பா..... விடிய விடிய இலக்கியப் பிரச்சனைகளை முன்வைத்து சமரசமற்ற "தீர்க்கமான முடிவு" வரும் வரை விவாதம் நடைபெறும் பல தடவை அடுத்த அறைகளில் இருப்பவர்கள் முறுமுறுத்தபடி எழுந்து வெளியே செல்வதையும் அவதானித்துள்ளேன். அவ்வளவுக்கு விவாதங்கள் காரசாரமாகவும், உணர்ச்சிவசப்பட்டதாகவும், இருக்கும். இவ்வளவும் ஏன் குறிப்பிடுகின்றேனென்றால் ........ மூன்று கதைகளையோ, அல்லது நான்கு கவிதைகளையோ எழுதி பத்திரிகைகளில் எங்கோ ஒரு மூலையில் அவை பிரசுரமானவுடன்

"பிரபல" என்ற அடைமொழியுடன் கூடிய எழுத்தாளர்களாகிவிடும் எமது இலக்கிய உலகில் நல்லை அமிழ்தன் அடக்கமாகவே இருந்து அளப்பரிய சேவை செய்து வருபவர். தான் வரித்துக் கொண்ட இலக்கியக் கோட்பாடுகளை விட்டு விட்டுக் கொஞ்சமும் வளைந்து கொடுக்கமாட்டாத நெஞ்சத்தால் இவரது படைப்புகளை பத்திரிகைகளிற் கண்ணுற் பார்க்க முடியாதிருக்கிறது. ஆனால் இவர் இப்பொழுது எழுதுவதே இல்லையென்ற குறைபாடும் உண்டு. நான் மேலே குறிப்பிட்டுள்ளதே உண்மையான காரணமாகும்.

"செம்பருத்திகள்" என்ற நூலுக்கு முன்னுரையெழுத வந்த நான், அதை விட்டு எங்கோ செல்வதாக உங்களுக்குப் பாடலாம். ஆனால் முன்னுரை தனிய நூலுக்கல்ல... நூலாசிரியருக்குந்தான் ஏனென்றால் படைப்பும் படைப்பாளியும் வெவ்வேறல்ல. திருமலையில் நடந்த ஒரு கவியரங்கத்துக்கு நான் தலைமை வகித்தபோது அதில் பங்கு பற்றிய நல்லை அமிழ்தனை.

"நாறுமலர் மலரும்
நூதனப் பூங்காவினிலே...
பேறு அடைந்ததற்கள்
பூத்தவொரு வாசமலர்

வாய்க்கால் வரம்பருகே
வளர்ந்து வரும் செங்கீரை
பூக்காத காவிடையே
பூத்தவொரு செம்பருத்தி
பிள்ளைமனதுடையோன்
பிதாமகனென் றெங்களிஞல்
கொள்ளை மகிழ் வுடனே
கூறிவரும் பேறடைந்தோன்
கல்விப் பணிப்பகத்தில்
கடமையதைச் செய்திடினும்
நல்ல அமிழ்தெனன
நாடறியப் பேரெடுத்தோன்"

என்று சபையினருக்கு அறிமுகப் படுத்தியுள்ளேன். இவை இன்றும் உண்மையான வாசகங்களேதான். இனி தொகுதிக்குள் புகுவோம்.

தமிழே!
நானுன்னை பாடவில்லை
ஏனென்றால்..
நீ யென்னை
எதிரியாக்கிப் பேசுவாய்.........

என்று ரத்தினச் சுருக்கமாக இன்றைய இலங்கையின் தமிழ்த்தலைவர்களது நிலையைக் காட்டுகின்றார். பதவிக்காகத் தமிழைப் பாடும் கவிஞர்களைக் கண்டு கொதிக்கின்றார். அதன்

பிரதிபலிப்பே இது எனது பாதை என்ற தலைப்பில்

கன்னல் மொழி
கதலிப் பூ நிறம்
மின்னல் இடை
மினுக்கும் நடை
இன்னும்... பல
இடையில் தெரியுமொன்று
வண்ணக் கவி பாடும்
வாலிபன் நானல்ல ... என்று தன்னை

இலக்கிய உலகிற்கு அறிமுகப் படுத்தும் அமிழ்தன். பின்னால் வரும் கவிதைகளில் தனது பார்வை, பயணம் எல்லாவற்றையுமே தெளிவாகக் காட்டியுள்ளார். ஒன்றுமே, ஒருவருக்குமே, விளங்காத ஏதேதோ எழுதிவிட்டு உத்தி உருவக மென்றும், அதையேதான் கவியம்சம் என்றும் கூறிக் கொண்டு கூத்தடிக்கும் கூட்டத்தினரிலும் பார்க்க, வெறும் வரியாக இருந்தாலும் எரிகின்ற பிரச்சனைகளை கோடிட்டுக் காட்டிய நல்ல அமிழ்தன் பாராட்டிற்குரியவரே இது என் நண்பன் என்ற யோக்கியதைக்காக தூக்கிவிடுவதற்காக இப்படிக் கூறவில்லை

(அந்தக் கைங்கரியத்தைத் நான் ஒருபோதும் செய்பவனுமல்ல) மற்றும்படி தொகுதியிலுள்ள கவிதைகள் எல்லாவற்றையும் அக்குவேருய், ஆணிவேருய் பிரித்து விமர்சிக்க நான் விமர்சகனல்ல; அதுதான் முன்னுரையின் முக்கியமுமல்ல. அதை நானே, காலம் செய்யும். அமிழ்தன் யாருக்காக எழுதுகின்ருரோ, அந்த மக்கள் செய்வார்கள். தொகுதியிலுள்ள அனைத்தும் ''பரிசுத்தமானவை'' யென்ருே, விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட விக்கிரகங்களென்ருே நான் கூறவில்லை. அவைகள் நிச்சயமாக விமர்சனத்துக்கு உட்படவேண்டியவையே.

நல்லை அமிழ்தன் எழுதிய சிறுகதைகளே என்னை மிகவும் கவர்வன. இன்றைய சட்டதிட்டங்களுக்கமைய அவரது சிறுகதைகள் பிரசுரிக்க முடியாதிருக்கின்றன. அவ்வளவுக்கு உன்னதமானவை. இந்தச் சிறிய தொகுதி மூலம் இவரை முழுமையாகத் தரிசிக்க முடியாது என்பது மட்டும் உண்மை.

புத்தூர், கிழக்கு
புத்தூர்
4-3-76

புதுவை —இரத்தினதுரை
(வரதபாக்கியான்)

# அவன் ஒரு சமுத்திரம்

அவன் 1960-ல் நல்லூர் சாதனை பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த பொழுது "கலை விளக்கு" என்னும் பாடசாலைக் கையேட்டில் தமிழ் மீது கொண்ட பற்றினால் தன் பெயரை "அமிழ்தன்" என மாற்றி முதற் கதை எழுதினான்......

60 க்கும் 70 க்கும் இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கதைகளையும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நாடகங்களையும் இருநூறுக்கு மேற்பட்ட மரபுக்கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதினான். "இராவணன் கட்டளை" "தாஜ்மகால்" நாடகங்களுக்கும் பல சிறுகதைகளுக்கும் பரிசுகளும் பெற்றான்.

சமுதாய அவலங்களையும் — கொடுமைகளையும் — சாதி — மத — இன — அடக்குமுறைகளையும் சமாதான முறையில் தீர்க்க முடியாதென்பதை உணர்ந்தான். 70-இல் போக்கை மாக்சிஸ லெனினிசத்துடன் மாவோசிஸத்துக்கு மாற்றிக் கொண்டான்

இன்றைய புரட்சிகர கலை இலக்கிய வாதிகளும் மாக்ஸ்சோடு நின்றுவிடாது மாவோ

சிலத்தை முன்னெடுத்து இலக்கியம் படைக்க வேண்டுமென்ற வேட்கையுடன் தன் படைப்புகளை தீர்க்கமான முடிவோடு சரியான பாதையில் 70-க்கு பின் எழுதிவருகின்றான். இதனால் முன்னர் போல எந்தப் பத்திரிகையிலும் அவனுக்கு எழுதவாய்ப்பு இல்லாமல் போய் விட்டது.......

புத்தகம் போடுவதற்கு அவன் என்ன செல்வந்தனா? சாதாரண தொழிலாளியின் மகன்— இன்று சாப்பாட்டுக்கே தினம் மராடிக்கும் கூலிக் 'கிளார்க்''

விலைவாசிகள்—அச்சுச் செலவுகள் அதிகமானதால் எழுதுவதையே குறைத்துவிட்டான். அதன் பிரதிபலிப்பே ''செம்பருத்திகள்'' என்னும் இப்புதுக்கவிதை நூல்.

அவனின் இந்நூல் விமர்சகர்களுக்கும்—எழுத்தாளர்களுக்கும் — புத்திஜீவிகளுக்கும் ஒருவித ஏடாட்டத்தை, மன உழைச்சலை கொடுக்கலாம். ஆனாலும் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட கஷ்டமுறும் மக்கள் இந்நூலைப்பற்றி எதைச் சொல்கிறார்களோ அதை அவனும் ஏற்கத்தயாராக இருக்கிறான்:

உருவத்திற்கு இடம் கொடுத்தாலும் உள்ளடக்கத்துக்கே முதன்மை கொடுத்து இவற்றை

படைத்துள்ளான்... இன்றைய நிலையில் புதிய சனநாயக வளர்ச்சியில் உள்ளடக்கம் சரியாக அமைந்தால் உருவும் தானாகவே அமையும் என்பதைக் கோட்பாடாகக் கொண்டு இலக்கியம் சமைக்கின்றான்.

“செம்பருத்திகளை தீவிரம். வரிகள்—நொடிகள்—அதுகள்—இதுகள் என்று யாரோ முணுமுணுப்பது அவன் காதுகளிற் கேட்டாலும்—அவன் நேசிக்கின்ற மக்கள் செம்பருத்திகளை நேசிப்பார்கள் என்ற உணர்வில் செம்பருத்திகள் என்று தனிக்கவிதையை தொகுதியில் சேர்க்காமல் தொகுதிக்கே செம்பருத்திகள் என நாமம் சூட்டியுள்ளான்.

செம்பருத்திகளுக்கு முன்வந்து முன்னுரை எழுதிக் கொடுத்த புதுவை இரத்தினதுரைக்கும்—அட்டைப்பட எழுத்து வரைந்த புரட்சிக் கவிஞன் கே. அவர்களுக்கும் இந்நூலை வெளியிட்ட 'முன்னோடிகளுக்கும்' நூலை அச்சிட்ட நாவலர் பதிப்பக உரிமையாளர் எம். வி. யோகநாதனுக்கும் நன்றிகள். இவற்றை வெளியிட்ட இலங்கை இந்திய சஞ்சிகைகளுக்கும் நன்றி தெரிவிக்கின்

றான். மக்களின் கருத்துக்களை எதிர்பார்க்கின்றான்;

இல 8, அரச வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை
6-3-76

தோழமையுள்ள
நல்லைஅமிழ்தன்

# தமிழ் வாழ்த்து

தமிழே
நானுன்னை பாடவில்லை
ஏனென்றால்
நீ யென்னை
எம். பி. யாக்கி போடுவாய்

# எனது பாதை

கன்னல் மொழி
கதலிப் பூ நிறம்
மின்னல் இடை
மினுங்கும் நடை
இன்னும் பல
இடையில் தெரியுமென்று
வண்ணக் கவியாடும்
வாலிபனல்ல நான்— என்
எண்ணம் பொருள் செயல்
எல்லாம் ஏழைகள்
தொழிலாளிகள் விவசாயிகள்
துயர் துடைக்க போரிடும்
இயக்கத்துக்கே சொந்தமாகும்

# நிலைப்பாடு

இயக்கமாய் நிலைக்காதவர்கள்
இலக்கியங்கள் எல்லாம்
துலக்கமாய் மக்களிடம் சேராது
ஓர் நாள்
இவர்கள் வேசங்களெல்லாம்
எங்கள்
புதிய சனநாயக புரட்சியிலே
தொங்கியே கலையும், எரியும்...

# புதுவழி

இங்கு மொரு
வியட்நாம் தோன்ற வேண்டுமெனில்
எங்கள் கிராமங்கள் எல்லாம்
மாவிட்ட புரமாய் சங்கானை
மட்டுவிலாய் மாறி—புதுச்
சரித்திரம் படைத்திடின்
ஈழமெங்கும்
சிரித்திடும் செங்கொடி தோழா

# பரம்பரை

கிட்டிணனும் சின்னவனும்
கிழக்காலே வந்து
கொட்டில்களை கோப்பைகளை
கோடியிலே சால்வை சுழற்றி
அடைத்து
முப்பத்து நயினார்களுக்கு
கப்பமும் கொடுத்து
பல்லக்கு தூக்கவா ?
ஆண்ட பரம்பரை
மீண்டும் ஆள்வதற்கு
அழுகின்றார் தனிநாட்டு தோழர்கள்
ஐயோ... பாவம் ...

# சிகிச்சை

ஐயா பெரியவரே
அதிகம் படித்தவரே
அடியேன் வணக்கங்கள்
உங்கள் எல்லா நோய்களுக்கும்
எங்கள் கைகள்
அறுவைச் சிகிச்சை செய்ய
ஆயுதங்கள் எடுக்காது
ஆனால்
முற்றிய உங்கள் உடம்பில்
வந்துள்ள புற்று நோய்க்கு
அறுவை சிகிச்சைதானே
செய்ய வேண்டும்.

# சுதந்திரம்

எங்கள் நாடு
சுதந்திரம் அடைந்தும்
எத்தனையோ வருடமாகியும்
இன்னும் 'கியூ' வரிசைகள்
அழியவில்லை
ஏனென்றால்
இங்கு நடப்பது
ஜனநாயக ஆட்சி

# வாழ்க்கை

நாங்கள் புள்ளடி போட்டவர்கள்
பேரவைக்கு சென்று விட்டார்கள்
மலிவு விலையில் கடனுக்கு
கார் எடுப்பதற்கு
எங்கள் நிலைமையோ
அரிசி, சீனி, மா அவிக்கும்
கிழங்கு அத்தனைக்கும்
பெரிய விலை கொடுக்கும்
பட்டினி வாழ்க்கை

# குறுக்குவழி

தேனாகப் பொன் நிலவு
எரிந்தால் என்ன
மீனாக நட்சத்திரங்கள்
வானில் பறந்தாலென்ன
நானாக இயக்கத்தில்
நிலைக்காதவர்கள்
காணாத வழிக்கு
கலைகளினை இழுப்பதை
நேராக அழிப்பதற்கு
நிமிர்கின்றோம் நாங்கள்

## கலப்படம்

கடையில் வாங்கிய
அரிசியை
அடுப்பில் வைத்து
வடித்த போது
எஞ்சியது முழுக்க
கற்கள் தான்

## தத்துவம்

தாயின் வாலை
நிமிர்த்த முடியாது
நீயும் நானும்
நினைத்தால்
வெட்டியெறிந்து விடலாம்

# தமிழ்ப்பற்று

நாங்கள் தமிழ்
எழுத்து வினைஞர்கள்
எங்கள் குழந்தைகளுக்கு
பெயர் மட்டும்
தமிழில்தான் சூட்டுவோம்
ஆனாலும்
அலுவலகத்தில் கையெழுத்தை
ஆங்கிலத்தில்தான் போடுவோம்

# 74-ல் இலங்கை

மணியம் கடையில் வெட்டி
எறிந்த
கருகிய பாண் துண்டை
அவன்
கையால் எடுக்க ஓடிய
பொழுது
இடையில் வந்த நாய்
தொடையை கடிக்க
துண்டுப் பாண் அவன்
கையில் துவண்டது
இரத்தம் வழிந்து நிலத்தை
உண்டது
இதுதான் 74-ல் இலங்கை

## நீ லை

ஆயியும், தேவியும்
என்னை அடித்து
சுடலையில் போட்டு
எரித்தாலும் — என்
ஆவியும் இதயமும்
மாவோ தத்துவத்தை
மறந்திடாது தோழா

# போர்வை

மாவோ கருத்துக்களை
மனதார மேடையில்
பாவராய் இசைத்தவர்
விடிந்ததும்
வேலுப்பிள்ளை சாத்திரியிடம் — தன்
கால நிலையை
சாத்திரமாக எழுதிச்
சென்றார்

# மயக்கம்

முன் நிலவை
முல்லையை—பெண்
பின்னழகை
கன்னலைக்
கவி பாடுவதால்
என்னுலகை
உழைத்தொழிலாளிகள்
விவசாயிகள்

உன்னருகே வாரார்
உலகினையே வென்றிடுவார்
உன் மயக்கம் கொன்றிடுவார்

# உனக்கல்லடி....

என் தொழிற்சாலையில்
வேலை நிறுத்தம் நடந்தது
கதவுகளை
இழுத்து பூட்டிவிட்டேன்
ஏன் தெரியுமா
நானோர் (இளிபு) கம்யூனிஸ்ட்
ஆலைபடியால் தான்

## சூரியன்

எழுந்து வரும்
சூரியன் கிழக்கில்
சிவந்து வருவது
உழைக்கும் அணியின்
வாழ்வின்
உயர்ச்சிக்குத்தான்

## சந்தர்ப்ப வாதம்

அந்த மனிதன்
தேசிய ஒற்றுமையை
மக்கள் ஆட்சி மலர்ந்ததும்
தெருவெல்லாம் பேசினான்
இன்று
j. p. பட்டம் கிடைக்காததால்
தெருவெல்லாம்
வகுப்பு வாதம் பேசுகின்றான்

# நீலச்சிவப்பு

நாங்கள்
புதிய யுகத்தின்
சிவந்த புஸ்பங்கள்
என்பதை மறந்த
திரிபு வாதிகளே
இன்னும் உங்கள் நிறம்
நீலச் சிவப்புத்தானே ..
இதை மாற்றும்
எங்கள் கரங்கள்...
உங்கள் புன்னடிக்கு மட்டும்
ஓடிவராது...

# தேசஜூர்ரியம்

மாவலிக் கரையினிலே
நெற்கதிர்களை
வெட்டுகின்ற சிறிசேனா
அப்துல்லா அழகையாத்
தோழர்களே
வெறிச்சோடி வரண்டிருக்கும்
எங்கள் வாழ்வினிலே
வெள்ளி பூக்க வேண்டுமெனில்
மிடுக்காக நிமிர்ந்திருக்கும்
புள்ளடிக் கொடியினை வெட்டி
மொழியினை நுழைக்காமல்
ஐக்கியமாய் சமதியக்கத்தில்
ஆயுதமேந்தி போரிடுவோமெனில்
நிட்சயமாய் எமதிலங்கை
நிமிர்ந்துவரும் சிறுபோல்...

## நடிப்பு

பக்த நந்தனார்
வில்லுப் பாட்டை
பரவசமாய் நடத்தியவர்
ஆலயப் பிரவேசப்
போராட்டத்தை நசுக்க
இரகசியமாய் 'ஐயர்களுக்கு'
நிதி வழங்குகிறார்

## கொடை

லெனின் வளர்த்த
உருசியா இன்று
இலங்கையின் வளர்ச்சிக்கு
வட்டிக்குப்
பணம் தருகின்றது

# குறுக்கீடு

நாங்கள்
நட்சத்திரப் பூக்கள்
நீங்கள் விரும்பினால்
எங்களுடன் சேருங்கள்
இல்லையேல்...
எங்கள் பாதைகளை
விட்டு விலகுங்கள்
மறுத்தீர்களானால்
அறுத்திடுவோம் உங்கள்
தலைகளையும்...
ஏன் தெரியுமா
நாங்கள் தான் இயக்கமாய்
நிலைத்து போர் புரிபவர்கள்...

# பாரதத் தோழர்களே

பாரத பூமியின்
விடுதலைக்காக
ஆயுத மேந்தும்
வீரர்களே
உங்கள் போரில்
வெற்றிச் சிவப்பு
காண வேண்டுமானால்
உதிரிகளாய் போகிடும்
பிழையுள்ள தத்துவங்கள்
விட்டொழித்து
ஓர் புரட்சிகர அணியின்
பின்னே திரளுங்கள்
அப்போதான் நீங்கள்
ஏகாதிபத்தியத்தை
திரிபுவாதத்தை
தீவிரவாதத்தை வென்று
பாரத பூமியில்
செங்கொடியை நாட்டலாம்

# எழுத்தாளர்கள்

உழைப்பவனுக்கு
தொழில் வேண்டும்
உழுபவனுக்கு
நிலம் வேண்டும்
என்று
எழுதுவதனால் பயனில்லை
உழைப்பவனும் உழுபவனும்
உலகினையே ஆள்வதற்கு
எடுத்திடுவோம் ஆயுதங்கள்
என்று
எழுத்தாளர்கள் இயக்கமாய்
அணிதிரள்வோம் இன்றே

# எதிரொலி

ஆழிக் கடலும்
அடித்துப் புரளலாம்—ஆனால்
ஏழைக் குரல்கள்
எழுந்து சேர்ந்தால்
ஊழித் தீயும் அழியும்
உலுத்தல் நாய்கள் ஒழியும்.
நல்ல
வேளை வருவதனால்
நாளை உதிக்கும் கதிரவன்
நாலு திசையும்
தொழிலாளர் விவசாயிகள் சேனை
சிறக்க
சிவப்பு ஒளியை சிந்தட்டுமே

# இந்தியாவே

உலக ஜனநாயகத்தின்
மலர்க் கிரீடமே
இந்தியாவே...
உனது கிரீடத்தில்
கற்களை எடுத்தெறியும்
இந்திரா ஜெ. பி. மூப்பனர்
கல்யாணசுந்தரம் எம். ஜீ. ஆர்
கருணாநிதி, பருவா
இன்னும் பலர்
உனக்கு எப்படித்தான்
வாழ்வு தருவார்கள்...
உன் பசியும் பட்டினியும்
அழிந்து போக—
ஆயுதமேந்தும் இயக்கத்தின்
தலைமையை ஏற்றுயானுல் தான்
நின் புத்திரர்கள்
சொர்க்க சுகத்தில்
வர்க்க பேதமின்றி
வளமாய் வாழலாம்

4

# ஜனநாயகம்

அடிக்கடி கட்சி மாறும்
ஆட்களாலே
துடிக்கின்ற ஜனநாயகத்தை
இடைக்கிடை
எங்கள் நாட்டில்
கிடைக்கின்ற புள்ளடியை
உடைத்திடு
இக்கலியிலிக்
உழைப்பவரும் உழுபவரும்
உன் சரித்திரம்
வெல்க் விடுவர......

# ஜனம்

தத்துவத்தின் தாவுகள்
தனித்திருக்கும் தலைகளில்
பிரகாசிக்கும் ஜுவாலைகள்
நிறைவாக்கும் மழலைகள்
மறைவான பூக்கதிராகி
புதிதாக ஓர் திரிபு நிலைமை
புரட்சியிலே முன்னேறி
வழிகாட்டுமானால் ..
புதிய சந்தாயக
புரட்சிக் கீதங்கள்
விரைவில்
தீப்பிழம்புகளாக அவர்களை
சுட்டெரிக்கும்.

# பிரகாசம்

ஏகாதிபத்தியமே
உனது உடலை
புரட்சியில் எரியும்
தீப்பிழம்புகள்
சாம்பலாக்கி
சமுத்திரத்தில்
கரைக்கும் பொழுது
முழு உலகமுமே
செங்கொடியால்
போர்த்தப்பட்டு
பாட்டாளி வர்க்க
சர்வாதிகாரத்தில்
பிரகாசிக்கும் காலம்
ஆசியத்து மண்ணில்
தெரிவதைக் காண்.

# காலம்

அட்டன் கண்டி
அழகுமிகு மாத்தளை
புத்தளம் கிளிநொச்சி
போகம்பரை திருமலை...
ஈழமெங்கும்
பொன் கொழிக்க வைக்கும்
தோட்டத் தொழிலாளர்கள்
செங்கரங்கள் — சீனத்
தலைவன் மாவோ சிந்தனையால்
தெளிவுற்று
துப்பாக்கி — அரிவாள் — சுத்தியல்
எப்போது தூக்குமோ...
அப்போதான் — எம்
அன்னை பூமியும் சிவக்கும்
தொண்டமான் அசீஸ் துரைகளின்
வண்டவாளங்களும் தொலையும்.

## இலக்கியத் துரோணர்

துரோணன் கேட்டதற்கு
ஏகலைவன்
பெருவிரலை வெட்டியதனால்
எழுதுகின்ற நாங்களும்
எங்கள் பேனைகளை
பழுத்துவிட்ட துரோணர்களுக்காக
முறித்துவிட வேண்டுமா?

## தாமரைகள்

எங்கள் குளத்தின்
தாமரைகள்
உங்கள் கோயில்களின்
அர்ச்சனைக்காய் மலரவில்லை
பொங்கி வெடித்திடும்
புரட்சிப் படைக்கு
தங்கள் இதழ்களை
தரையில் வீசத்தான்
குளத்தில் மலர்கின்றன.

# ஆக்கிரமிப்பு

பாலஸ்தீன வீரர்கள்
உயிர் தேகங்களில்
டாங்கிகளை ஓட்டி
நில ஆக்கிரமிப்பில்
வதைகளை செய்து
கண்மணிகளை குழியில்
போட்டு...
அமெரிக்க டாலர்களில்
நுழைந்திருக்கும்
இஸ்ரேவல் ஏகாதிபத்தியமே
நீ அரபுத்தோழர்களின்
ஐக்கியத்தின் ஆயுதப்
போரிலே அழிவதை
மறந்தும்
ஆக்கிரமிப்பை நடத்தும் உன்னை
சீக்கிரம் அழிக்க
ஈழத் தொழிலாளர்களும்
அரபுத்தோழர்களின்
ஆயுதப் போருக்கு
இயக்கமாய் இணைவார்கள்
என்பதை மறந்துவிடாதே.

## புரட்சி

எங்கள் நாட்டிலும்
புரட்சி
எரிமலைகள் வெடிக்கும்
என்றெண்ணுல்
இங்கு நடப்பது
ஜனநாயக ஆட்சி
என்பதனுல்தான்.

## அயன்சிமித்தே....

சிவப்பு இரத்தம்
ஓடும் திமிரிலே
கறுப்பர்களை பலிகொள்ளும்
அயன் சிமித்தே
நாளை ஆபிரிக்க சிவப்பு இரத்தங்கள்
பாவி உன்னை மூழ்கடிக்கும்போது
'பரமண்டலத்தின் இருக்கும் பிதாவே
என்னை மன்னியும்'
என்று மட்டும் கத்திவிடாதே.

# தேர்தல்

பூச்சாடிகளில் வைத்திருக்கும்
மலர்க் கன்றுகள் போல்
புள்ளடியால் பேரவைக்குபோக
ஊர்க்கோடி தெருவெல்லாம்
ஓடிவரும் கூட்டத்தினரால்
இற்றைவரை
சீரான வாழ்வு எங்கள்
தேசத்திற்கு கிட்டியதா ?
இல்லை !
மாறாக மந்திரிமார்கள்
'மக்கள்மராவிடனும்' மலேசியா
சிங்கப்பூர் லண்டன்
உருசியா அமெரிக்காவிற்கும்
விமானம் எடுக்கின்றார்கள்
இதுதானே —
அடுத்த தேர்தலிலும்
அரைப் படப் போகின்றது...
இதைமாற்ற நாங்கள்
ஆயுதங்கள் ஏந்தாவிடின்
வெறுங் காகிதங்களாய்
வாழவேண்டியதுதான்

# வள்ளல்

நீரைத் தெளித்து
நீண்ட புகையிலை எடுத்து
கூனிப் பாயில் குந்தி
உள்ளிலை பொறுக்கி
காப்பிலை இழித்து
கைவலிக்க சுருட்டுகின்றோம்...
எங்கள் முதலாளியோ
எமது சம்பளம்
இரண்டு கிழமையாய் தரவில்லை
இன்று...
காரிலே வந்திறங்கிய
கண்ணாடி போட்டவரின்
பாசிச எதிர்ப்புக் கூட்டத்துக்கு
கத்தையாய் நோட்டுக்களை
காப்பிலைகள் எண்ணுவதுபோல்
வழங்குகின்றார்...

# மண் சரிவு

காடுகளை அழிப்பதனால் — மலை
நாடு மண்சரிவால்
பிணக் குவியல்களை
கண்ட பின்னும்
நிவாரணமென நிதிதேடும்
நீங்கள்
காடுகளை இன்னும் அழிப்பது
விவசாயம் செய்யவா
அல்லது
எம் தோழர்களை
நம்மாவே
சொர்க்கத்திற்கு அனுப்பவா

# கடலே.........

குமுறும் கடலே
எங்கள் இதயமும்
குமுறுகின்றது தெரியுமோ!...
நாங்கள் தொழிலாளிகள்
எங்கள் வியர்வைகளை
எடுத்துக் குளிக்கும்
ஏகாதிபத்திய — நிலவுடமை
பெருமுதலாளிகள்...
திரிபு வாதிகள்
இன்னமும் எம். பி. பதவிக்கு
வாக்கு கேட்டு வருகின்றார்கள்
என்றும்
இருளில் எம்மை பூட்ட...
நினைக்கும் இவர்கள் தலைகளை
எடுத்து உன்னிடம் எறிகின்றோம்
நீயே அவர்களுக்கு
நீண்ட நித்திரையை கொடு

# அழைப்பு

சட்ட மறுப்பு
சத்தியாக்கிரகம்
மூட்டை அடிப்பு
முழுசாய் குடியரசு பகிஷ்கரிப்பு
நாடு பிரிப்பு என்பவர்கள்
ஆளவந்தோரின் அரசபடைத்
தலைவருக்கு
கோழிக்கறியும் சூப்பும் போட்டு
கோலாகல விருந்து
கொடுப்பதுதான்
இவர்கள்
கூட்டும் அழைப்பு கொள்கையோ?

# தொழிற்சங்கம்

தொழிலாளர் உரிமைக்கே
தொழிற் சங்கமென்று சொல்லி
மலைநாட்டு மக்களை யெம்மை
மயக்கி ..
சந்தா வாங்கி
படமெடுத்து மாளிகை
வீட்டிலே குடியிருந்து
பிள்ளைகளுக்கு ...
சுயம்வரமும் செய்து
நியமன உறுப்பினராய்
தொழிலாளர் வாழ்க்கையினை
வியாபாரம் செய்வோர்
பழுதான கொள்கைகளை நசுக்கிட
முழுசாக நாடெங்கும்
புதிய செங்கொடிச் சங்கங்கள் எழுவது
அநியாயத்தையும் அடக்கு முறையையும்
துணிவாக எடுத்தெறிந்து
எங்கள் ஏழைத்தொழிலாளர்
எதிர்கால விடிவுக்கு
புத்தொளி பாய்ச்சத்தான்...

# விடிவை நோக்கி

சீதனம் ..
இது யாழ்ப்பாணத்தின் வேதனம்
'புதிய வடமண்ணின் சமாதி
கருங்கல்லுக் கட்டிடம் அதனால்
அதற்கு அழிவில்லை உருவில்லை'
என்றுருகும் ஏக்கப் பெருமூச்சுகள்
வெந்து அழிகின்றன ஏழைக்குடிசைகளில்
சுரண்டும் வர்க்கத்தின் சூரர்கள்
வாரி இறைக்கின்றார்கள் கிளார்க்குக்கு
டொக்டருக்கு எஞ்சினியருக்கு வாத்திக்கு
ஆனால்...
வயதேறிப் பல பெண்கள்
வாழ்வின் சுவை காணா தமிழ்க்கன்னிகள்
வாழ்வு நோக்கித் துடிக்கின்றன
பெத்தவனோ மாடாய் உழைத்து
பெத்துத் தள்ளிய பெண் மக்களுக்கு
எத்தனையோ வரன் தேடுகின்றான்
ஈற்றில் அவன் கண்டதோ ஏமாற்றம்
வர்க்கம் பிரித்து நம்

வளவெல்லாம் சுரண்டிய வளிசல்கள்
சிக்கனம் என்ற போர்வையில்
சிகரக் தவில் நாதஸ்வரத்துடன்
சீமையில் படிக்கும் சீர்கேட்ட
தறுதலைக்கு தாலி கொடுக்கின்றார்
இங்கே... மாற்றாக...
இப்படி எத்தனையோ குடும்பங்கள்
அப்படிச் செத்து மடிகின்றதோ? ..
இதை யார் கேட்பார்
மாற்று வழியும் இல்லையா... அந்த
மலர்களுக்கு ஒளியோ இல்லையா ..
இருக்கின்றது...
செங்கொடி சிரித்துப் பறக்கும்
சிவப்பான திருநாள் வருகின்றது:
அதைக் கண்டு எம் பெண்கள்
சிறப்போடு வாழட்டும்

# எனது கதாநாயகி

கடற் கரை மணலில்
நான் ஒரு நாள்
கவலை மறந்து கிடக்கின்றேன்
கூக்குரல் ஒன்று கேட்கிறது
குய்யோ முறையோ சத்தங்கள்...
துடித்துப் பதைத்து
எழுந்து உடன்
துணிந்து விரைந்து ஓடுகின்றேன்;

தடுத்து எனது கால்களினை
தாவி ஒருத்தி பிடிக்கின்ருள்
சற்றுத் திகைத்து நிற்கையிலே
துரத்திப் பிடிக்க நான் நினைத்த
துஸ்டர் சிலரும் ஓடுகிருர்.

ஆடைகள் ஏதும் இன்றி
அம்மணக் கோலத்தோடு
பேதலித் தழுது விம்மி
பொருமுகிருள்...
பேடு இவள் யார்?

"என் பெயர் சொல்ல மாட்டேன்
எனக் கிங்கே யாரும் இல்லை

அடுத் தடுத் தென்னைத் தீண்டி
அனைத்திங்கே இன்பம் கண்ட
வெறியர்கள் பல பேர்!
போர்த்துக்கீசர்...
ஒல்லாந்தர்...
பறங்கியர்...
"
..........

எனக்கின்று வயது 26
எனது ஜனனம் இங்கே நிகழ்ந்தது
H. S. C. பாஸாகி இரண்டு வருடம்
குடியரசன்று இது நடந்தது
எனக்குத் தொழில் இங்கேதுமில்லை
ஆனால் நான்
— கற்பை விற்கவில்லை
காடையர்தான் எனைக்
கடத்தி வந்தார்கள்
வாழ இனி நான் விரும்பவில்லை
சாக நினைக்கின்றேன்
தடுக்கா தெனை விடுங்கள்."

★ ★ ★

"பெண்மையை சாகத்திலே
தரித்திரங்கள் தீயிட்டடா
நேருக்கு நேராக முகம் கொடுத்து

போரிட்டு இவ்வுலகை மாற்றுகின்ற
பெரும் பொறுப்பு எனக்கிங்கே
நிறைய உண்டு
இது உனக்கு விருப்பமென்றால்
என்னுடன் வா!
இல்லையென்றால் இவ்விடத்தை
விட்டகன்று போ!

★ ★ ★

எழுந்தவன் கரங்கள் பற்றி
என் பின்னே நடந்து வந்தாள்
இன்று — என்னணியின்
ஒரு படைக்கு அவள் தலைவி!
வாசலில் பலபேர் வந்து
வந்தனம் கூறுகின்றார்
ஓகோ...... இனி
வருவது தேர்தலல்லோ
வருகின்றார் வாக்குக்கேட்டு
"நான் ஒரு கம்யூனிஸ்ட்
ஏழைகள் பணக்காரர்கள் பேதம் ஒழித்து
எல்லாம் கிடைக்க வழி செய்வேன்"
U. N. P. ஆள் வந்தான்
இலவச அரிசி தர இசை பாடினான்
எல்லாம் தேசிய மயமாக்குவோம்

என்று சொன்னது L. S. S. F
இனிய தமிழரசு பெற்றிடுவோம்
என்று முழங்கும் F. P.
இத்தனை கட்சிகளும்...
இன்னும் பல சுயேட்சைகளும்...
ஆயிரம் ரூபா சம்பளம் விரும்பி
காவடி எடுக்கின்றார் ஒரு புள்ளடிக்காக
அவளா விடுவாள் கேட்டுவிட்டாள்?

அரிசியில்லை, சீனியில்லை, அடுப்பெரிக்க
விறகு இல்லை; வீடும் இல்லை!
சேலை இல்லை. செல்வம் இல்லை.
சேர்ந்து வாழ தொழிலும் இல்லை
வேண்டியது எமக் கிங்கே
எதுவும் இல்லை... வேறெதற்கு
நாம் இங்கே வாழவேண்டும்?

ஐயா...!
கார்ரெடுக்கச் செல்கின்றீர் பேரவைக்கு
காலமெல்லாம் புள்ளடிகள் போட்டும்
கடைசிவரை என்ன செய்தீர் எங்களுக்கு
போதும் இனி புலுடாக்கள்
— அவியாதிங்கே!
போய் வாரும் என்று சொல்லி
அவள் எடுத்தாள் விளக்குமாற்றை
அதன் பின்பு...? அதன் பின்பு...?

# வியட்நாமை வாழ்த்தோம்

கம்போடிய இதயத்தில்
எழுந்தோடும் 'மீகொங்கின்'
இரத்தத் துளிகள்
மாவலி நீர்களான
எங்களிடம் சிவப்பாகி
மாவிட்டபுரம் சங்கானை
மட்டுவிலெங்கும் தீயாகி
புதிய செவ்விலங்கை
படைக்கத் துடிக்கும் நாங்கள்
வியட்நாம் தோழர்களை
வாழ்த்த கவிபாடோம்
அவர்கள் பாதையிலே
நாமும் விடுதலைபெற
ஆயுதங்கள் ஏந்திடுவோம்.

# இலங்கை மாதாவே

அன்னையே ஈழமே அழகே
அருஞ்சுடரே ஞாயகமே
உன்னையே வளமாக்க
ஓர் கவிஞன் பாடுவதைக் கேளாயோ...
தென்னை றப்பர் தேயிலை
மா பலா நெல்லிருந்தும்
இன்னுமேன் நாம்
இறப்பவர் போல் வாழவேண்டும்
முன்னர்வந்த வெள்ளையரால்
முற்றுமிழந்த நாமெல்லாம்
பின்னர் சுதந்திரத்தால்
பேறென்ன பெற்றுவிட்டோம்...
கண்ணிருந்தும் குருடாகி
காலமெல்லாம் புள்ளடிகள் போட்டோம்
வென்றவரோ மந்திரியாய்
வெளிநாடு சென்றதுதான் மிச்சமம்மா
தின்னவோ வழியின்றித்
தெருவெங்கும் திரிகிறோம் நாமம்மா
உச்சிமலைச் சாரலிலே
ஓடிக் கொழுந்தெடுக்கும் உத்தமரும்
பச்சை ரத்தம் வழிந்தோட
பகலிரவு பாடுபடும் தொழிலாளரும்
இத்தரையை ஆள்வதற்கு

இன்னுமேன் முடியவில்லையோ...
முத்தமிழை மார்க்ஸை
முழுநெருப்பாய்ப் பேசியவர்
சத்தியத்தால் ஏமாந்து
சாப்பிடவே வழியின்றி மடிகின்றோம்
புத்துலகைப் படைக்கவெனப்
புரட்சியினைச் சொன்னவர்தம்
கட்சியினை விற்கின்ற
காலமதாற் துடிக்கின்றோம்
எத்தனையோ இடரிருந்தும்
நாங்கள் ஏந்துகின்ற ஆயுதமே
உன்னிலையை மாற்றுமென
ஓரணியிற் சேர்ந்துவிட்டோமிதுபிழையா
தத்துவங்கள் விற்பவர்கள்
தரகர்கள் முதலாளிகள்
புத்தி ஜீவிகள் போலிகள்
தீவிர வாதிகளால்
சத்தியமாய் உன்நிலைமை
சரியாக அமையாது என்பதனால்
சித்தாந்தத் தெளிவோடு
சேர்ந்துவிட்டோம் விடுதலைக்கு
முத்திரையை வெட்டியவர்கள்
முழுசாக லெனினையே விற்பவர்கள்
பழுதான கொள்கைகளை

விரைவாக கிழித்தெறிய
விவசாயத் தொழிலாளர்கள் படை
புயலாகச் சீறுகின்ற
புதியதொரு யுகம்விரைவிற் தோன்று
மம்மா!

கார்களிலே திரிந்துகொண்டு
கார்ல் மார்க்ஸை சொல்பவர்கள்
ஊர்களிலே தேர்தலுக்காய்
ஓடிவாருர் நாய்களுடன்
உத்தமியே! இதுதானு
உண்மையான பொதுவுடமை
உண்ண உணவுமில்லை!
உடல் மறைக்க ஆடையில்லை
பொன்னும் மணியுமில்லை
புகவிடும் இல்லையென்று
அன்னையே உன்மக்கள்
அழுகின்ருர் தெரியலையா?
காடுதறித்து மணிக்கழனி
செய்யும் பொன்னுடலும்
ஓடாய் உடல்நலிய
உழுது வரும் மேனிகளும்
நெல்லு விளைந்தபின்னும்
நிறையாத வயிற்றுடனும்
தொல்லைபிணி துயருடனும்

துடிப்பதுதா னென்னவிதி
மேழி பிடித்துழுது
மேதினியைக் காப்பவர்கள்
பாலித் குளிக்கவில்லை
பஞ்சணையிற் படுக்கவில்லை
காலைக் கருக்கலிற்
கண்விழித்துப் படகோட்டி
மாலைப் பொழுதுவரை
மாய்ந்து முகம்சிவக்க
மீனைப் பிடித்து
மெலிந்திடுவோர் குடும்பமது
பாண்டின்னும் பரிதாப
வாழ்க்கையினைப் பாராயோ
உச்சிப் பகற்பொழுதில்
உழுதுழுது விதைத்தவர்கள்
கச்சை அவிழ்த்து வெறும்
கஞ்சியதும் குடிக்கவில்லை
மேனி அசைத்தறியா
மேல் மாடிக் காரரெல்லாம்
காணி நிலத்துரிமைக்
காரரென வாழ்கின்றார்
இந்த அமைப்பினுக்குள்
இம்முரண்கள் மாறிவிடா...
சொந்த நலன்களையே
சுரண்டலர்கள் விட்டுவிடார்
காலி முகத்திடலில்

கட்டடத்துள் இந்நாட்டுப்
போலி உறுப்பினர்கள்
புள்ளடியாற் போகும்வரை
மேழி பிடிக்கும்கை
மேன்மைநிலை காணாது
கூலி யுழைப்பவரின்
குடிசைகளு முயராது
உதிரக் கடலிடையே
உருவாகும் உழைப்பவரின்
புதியஜன நாயகப்
புரட்சியது ஒன்றேதான்
மார்க்கம் இனியுழைப்போர்
மலர ஒரு புதியவிதி
பார்ப்போம் எனவிடுக்காதே!
உன்பங்களிப்பும் தேவையம்மா!
அந்தப் புரட்சியதுக்
ஆயுதங்கள் தூக்கிடவே
இந்தப் புவியதனில்
இயக்கமாய் மலர்கின்றோம்
வந்தவர்கள் நம் வாழ்வை
வதக்கியது போதுமம்மா
அந்தரத்திற் துடிக்கின்றோம்
அரிசிவிலை கூடியதால்
இந்தநிலை உந்தனுக்குத்

தொடர்ந்திருந்தல் நீதியதோ...
நொந்தவர்கள் நாங்கள்
நோவின்றி வாழ்வதற்கு
இக்கணமே ஆயுதங்கள்
எல்லாரும் ஏந்திடுவோம்
ஏழைகள் தொழிலாளி
விவசாயி யாட்சிதனை
பாரிலுள்ளோர் வியந்திடவே
பாங்காக அமைத்திடுவோம்.



நாவலன் பதிப்பகம், நல்லூர்



# இவர்தான் நல்லை அமிழ்தன்

1945-ம் ஆண்டு "பூபதி" — "[illegible]" தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராக நல்லையிற் பிறந்த எழுத்தாளருமான இவர் 1975-ம் ஆண்டு நெல்லை நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கல்வித்திணைக்கள எழுதுவினைஞருமான மகேஸ்வரி என்பவரைத் திருமணஞ் செய்து கொண்டார்.

1972-ல் திருமலையில் "முன்னோடிகளை அமைத்ததின் மூலம் ஈழத்துப் படைப்பிலக்கியங்கள் 'தீர்க்கமான முடிவை' மக்களுக்கு முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்ற கருத்தை முன்னெடுத்து இன்று வெற்றி கண்டிருக்கும் "புதிய தலைமுறை" எழுத்தாளர்களின் முன்னோடி இவர் தான்.

1974-ம் ஆண்டு முற்போக்கு என்ற கரையிற் புரட்சிகர எழுத்தாளர்களை இக்கிய போது திருகோணமலையில் ஈழத்தின் வரலாற்றுப் புகழ் மிக்க எழுத்தாளர், கலைஞர் மகாநாட்டைக் கூட்டி வெற்றி கண்டவர்.

திருகோணமலை  
6-3-1976

யோன்—செல்வராஜா  
முன்னோடிகள் சார்பில்